# மெட்ரோ ரயில் நிலையத்தில் தேர்தல் விழிப்புணர்வு பிரசாரம்

சென்னை, மார்ச் 22–

சட்டசபை தேர்தலில், ஓட்டளிப்பதன் அவசியம் குறித்து, எம்.ஜி.ஆர்., சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தில் நேற்று, விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி நடத்தப்பட்டது.



■ சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தில் நடந்த விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி.

சென்னையில், முக்கிய மெட்ரோ ரயில் நிலையங்களில், கொரோனா தடுப்பு விழிப்புணர்வு, சட்டசபை தேர்தலில் ஓட்டளிப்பதன் அவசியம் குறித்து, விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதையொட்டி, சென்னை எம்.ஜி.ஆர்., மெட்ரோ ரயில் நிலையத்தில், நேற்று இரவு, நிமிர்வு கலையகத்தின் சார்பில், சட்டசபை தேர்தலில் ஓட்டளிப்பதன் அவசியம் குறித்து, விழிப்புணர்வு பிரசாரம் செய்யப்பட்டது.

வாக்குரிமையின் முக்கியத்துவம் குறித்தும், அனைவரும் தேர்தலில் ஓட்டளிப்பதன் அவசியம் குறித்தும், கலைநிகழ்ச்சிகள் மூலம் பயணியருக்கு விளக்கப்பட்டது.